12. வரவு-செலவுத் திட்டம், 2019-2020, பொது விவாதத்திற்கான பதிலுரை-*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் அதுகுறித்துப் பதில் சொல்லி முடித்துவிட்டார்.* (குறுக்கீடு) *திரும்பத் திரும்ப அதையே கேட்டுக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்?*

திரு. துரைமுருகன்: *அவர்* clear *ஆகச் சொல்லவில்லையே!*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் பதிலைச் சொல்லிவிட்டார்கள்.* (குறுக்கீடு)

திரு. துரைமுருகன்: *என்ன சொன்னார்? 201-ஆ, 9-ஆ அல்லது 19-ஆ என்பதை தெளிவாகச் சொல்லச் சொல்லுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவருடைய பதிலைச் சொல்லிவிட்டார்கள்.* (குறுக்கீடு) *திரும்பவும் அதையே நீங்கள் கேட்டீர்களென்றால் நான் என்ன செய்வது?*

திரு. துரைமுருகன்: *சரி* Sir, *அவர் எங்களுக்குச் சரியான பதிலைச் சொல்லாததால், நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.*

(*திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.*)

14. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—*தொடர்ச்சி*

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2019—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)